**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 01.12.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு புதுமையான துத்தநாக உரத்திற்கு காப்புரிமை

தாவரங்களில் துத்தநாகத்தின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'எக்ஸோ–பாலிசாக்கரைடு அடிப்படையிலான கிலேட்டட் துத்தநாக உரம்' தொடர்பான காப்புரிமையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இந்த காப்புரிமை இந்திய அரசின் காப்புரிமை அலுவலகத்தால் 574341 என்ற எண் வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காப்புரிமை முனைவர் கு. யாழினி, முனைவர் சு. தியாகேஸ்வரி, முனைவர் இரா. ஆனந்தம், முனைவர் து. செல்வி, முனைவர் எஸ். மாரிமுத்து, திரு. ஆ. மணிகண்டன் மற்றும் முனைவர் இல. சித்ரா ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த காப்புரிமை, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக, இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் டாக்டர் பட்ட மாணவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வில், நிலையான வேளாண்மைக்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த எக்ஸோ–பாலிசாக்கரைடு (EPS) எனப்படும் பொருளைப் பயன்படுத்தி, புதுமையான கிலேட்டட் துத்தநாக உரம் உருவாக்கப்பட்டது. சோடிக் தன்மை கொண்ட நெல் வயலின் வேர் பகுதிகளில் இருந்து பெறப்பட்ட பேசிலஸ் பாராலிச்செனி:ஃபார்மிஸ் என்ற நன்மை பயக்கும் பாக்டீரியாவின் செல் சுவரில் இருந்து இந்த EPS பிரித்தெடுக்கப்பட்டது. துத்தநாக அயன்களை பிணைக்கும் திறன் இந்த EPS கொண்டுள்ளதால், 16.8% துத்தநாகம் கொண்ட, சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய Zn–EPS நுண்ணூட்ட உரம் தயாரிக்க உதவுகிறது. Zn–EPS உரத்தை பயன்படுத்தியதில், வழக்கமாக பரிந்துரைக்கப்படும் ZnSO4 உரத்தை விட தாவர வளர்ச்சியும் விளைச்சலும் தெளிவாக அதிகரித்தன. இது எளிதில் சிதையும், மேலும் துத்தநாகத்தைச் சிறப்பாக பிணைத்து தாவரங்களுக்கு

எளிதில் கிடைக்கும் பண்புகளால், துத்தநாகப் குறைபாடுகளை சமாளித்து, செயற்கை கிலேட்டர்களுக்கு மாற்றான, சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வாக, நீடித்த சத்து மேலாண்மையை ஏற்படுத்துகிறது..

இந்தக் காப்புரிமைப் பெற தேவையான மனு தயாரித்தல் முதல், காப்புரிமை வழக்கறிஞருடன் சேர்ந்து அதைச் சமர்ப்பிக்கும் வேலை வரை அனைத்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்டமேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் தே. சுரேஷ்குமார் அவர்களின் வழிகாட்டுதலில் செய்யப்பட்டது. இந்த செயல்முறைக்கு முனைவர் நா. நடராஜன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக செய்யப்பட்டார். இந்த கண்டுபிடிப்பின் காப்புரிமை பெற்றவர்களை துணைவேந்தர் முனைவர் ர. தமிழ்வேந்தன் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்